**தலைப்பு 328 - மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் - 2024**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 328 - மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களத்தின் இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை**

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களத்தினதும் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களத்தினதும் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) வருமான பெறுவனவு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் பரீட்சை மீதிக்கு இணங்க வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 33,183,020 ஆன போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் ஏனைய வருமான தலைப்புக்களுக்காக அறிக்கையிடும் நிறுவனத்தினால் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 33,182,246 எனக் குறிக்கப்பட்டு இருந்தது. | 2024 ஆம் ஆண்டின் பரீட்சை மீதியின் கூட்டுத்தொகையைக் கணக்கிடும் போது ஏற்பட்ட தவறு காரணமாக அது தவறாக திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்றில் குறிக்கப்பட்டிருந்தது என்பது. | மீதிகள் சரியாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படுதல் வேண்டும் என்பது. |

**(ஆ) மூலதனச் செலவினங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | வருடாந்த நிதிக் கூற்றுகளில் அலுவலக உபகரணங்கள் மற்றும் கணினி உபகரணங்கள் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியிலான மீதி மற்றும் 2024 ஜனவரி 01 ஆம் திகதியிலான மீதி என்பன முறையே ரூபா 847,150 | 2024 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் 2024 ஜனவரி 01 ஆம் திகதியிலான மீதியுடன் சேர்க்கப்பட்டு ஆரம்ப மீதியாகக் குறிப்பிடப்பட்டிருந்தது என்பது. | நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உம் மற்றும் ரூபா 5,356,230 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | | |
| (ii) | நிதி அல்லாத சொத்துக்களைக் கணக்கீடு செய்வதற்கு பொது திறைசேரியின் அரச கணக்கீட்டு திணைக்களத்தின் இலக்கம் 06/2024 கொண்ட வழிகாட்டிக் கோவையின் 8.1 மற்றும் 8.2 பிரிவுகளின் பிரகாரம் நிதி அல்லாத சொத்துக்கள் இருக்குமாயின் அவற்றை சரியாக இனம் கண்டு கிரயத்திற்கு அல்லது கிரயம் இனம் காணப்பட முடியாத சந்தர்ப்பங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், 2024 ஆம் ஆண்டில் திணைக்களம் சுவீகரித்திருந்த ரூபா 1,937,680 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களும், ரூபா 5,967,280 பெறுமதியான பொறிகள் மற்றும் உபகரணங்களும் அறிக்கையிடப்பட்டு இருக்கவில்லை. 2024 ஆம் ஆண்டில் ஏலமிடப்பட்ட 24 பொறிகள் மற்றும் இயந்திர உருப்படிகளின் பெறுமதிகளும் அகற்றல்களாக பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | தலைமை அலுவலகத்தின் மூலம் கொள்வனவுகள் சொத்துக்களாக கருதப்பட்டு கணக்கு வைக்கப்பட்டுள்ளமை. எஞ்சிய நிதியேற்பாடு பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டு அதன் மூலம் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டுள்ளமையால் திணைக்களத்தின் சொத்துக்களாக கணக்கு வைக்கப்படவில்லை என்பது.<br><br>2023 ஆம் ஆண்டு பொருள் மெய்மையாய்வுக்குரிய 2024 ஆம் ஆண்டின் போது ஏலமிடப்பட்ட 24 உருப்படிகளின் பெறுமதிகள் இந்த மாதத்தினுள் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் அகற்றுவதற்கு விடயப்பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது என்பது. | - மேற்படி - |

**(இ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தினால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை 755 (1) இன் பிரகாரம் | 2025 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் பொருட்களின் பெறுகை மற்றும் விநியோகம் ஆகயவற்றை சரியாக | பதிவேடுகள் சரியாகப் பேணப்படுதல் வேண்டும். |

| | |
|---|---|
| களஞ்சியசாலைப் பதிவேடு ஒழுங்காக மற்றும் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டு இருக்கவில்லை என்பது மாதிரி கணக்காய்வுப் பரீட்சிப்புகளின் போது அவதானிக்கப்பட்டது. | ஏடுகளில் குறிப்பிடுவதற்கு விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்பது மற்றும் அதனை நேரடியாகக் கண்காணிப்பு செய்வதற்குத் தேவையான அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்பது. |

**2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன என்பது,

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

**3. நிதி மீளாய்வு**

**3.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை 446 (2) | | அனைத்து பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான குறிப்புகள் முறையாக ஒழுங்கு முறைப்படி அன்றைய தினத்தில் பேணப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் ஒரே இலக்கத்தினைக் கொண்ட கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் மூலம் இரண்டு வகையான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தவறுதலாக ஒரே இலக்கம் கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளுக்காக இரு தடவைகள் இடப்பட்டுள்ளது என்பது மற்றும் அந்த கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்காக சிகாஸ் வேலைத்திட்டத்தில் இலக்கம் 02 எனும் வகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது திருத்தப்பட்டுள்ளது எனவும் எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகளைத் தவிர்க்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்பது. | நிதிப் பிரமாணக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயல்வழிக் கோவையின் விதி XV அத்தியாயத்தின் 214 ஆம் பிரிவு | உத்தியோகத்தர் ஒருவர் பதவியினைக் கைவிட்டுச் சென்றமைக்கான கட்டளையினைக் குறித்த உத்தியோகத்தருக்கு உடனடியாகப் பதிவுத் தபாலின் மூலம் அனுப்பப்பட வேண்டிய போதிலும், உத்தியோகத்தர்கள் சேவையினைக் கைவிட்டுச் சென்ற 2 மாதங்கள் தொடக்கம் 3 வருடங்கள் வரையான காலதாமதத்தின் பின்னர் குறித்த கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்ததுடன் குறித்த காலப் பகுதியினுள் ரூபா 388,730 ஆன சம்பளக் கொடுப்பனவும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் திருத்தப்படும் என்பது. | செயல்வழிக் கோவையின் விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 தொலைநோக்கு மற்றும் செயற்பணி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதி விசேட வர்த்தமானி இலக்கம் 1640/31 இற்கு அமைய தொழில் உறவு மற்றும் மனிதவள அமைச்சின் கீழ் மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தினைத் தாபித்தல் 2010 ஜனவரி 01 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட போதிலும், அத்தினம் தொடக்கம் கணக்காய்வுத் | தற்போது தேசிய மனித வளங்கள் மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கை தொடர்பான தேசிய மனித வள அபிவிருத்தி சபை (NHRDC) நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன் அதற்குரியதாக தேசிய மனித வளத்தினை அபிவிருத்தி செய்யும் சபையிடம் விசாரணை செய்யும் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பது. | தேசிய கொள்கையினை உருவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

தினமான 2024 மார்ச் 25 ஆம் திகதி வரையிலும் தகவல் சேகரிப்பு மற்றும் தெளிவுபடுத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் தேசிய ‘‘மனித வலு மற்றும் வேலை வாய்ப்புக் கொள்கை ஒன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்துதல்’’ எனும் அடிப்படை நோக்கத்தினை நிறைவேற்றிக்கொள்ள முடியாது இருந்தது.

**4.2 திட்டமிடல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 ஆம் ஆண்டின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் பௌதிக முன்னேற்றம் என்பவற்றின் பரீட்சிக்கும் போது 2509 செலவின விடயத்தில் பௌதிக முன்னேற்றம் அதிகரித்ததுடன், அதனோடு ஒப்பிடும்போது நிதி முன்னேற்றத்தின் வீழ்ச்சி அசாதாரணமான வீச்சினைக் கொண்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கு அமைய 9 ஆம் தரத்தில் மாணவர்களுக்குத் தொழில் வழிகாட்டல் சேவை வழங்குதல், பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த மாணவர்களுக்குத் தொழில் வழிகாட்டல் சேவையினை வழங்குதல் மற்றும் தொழில் வாய்ப்பற்ற நபர்களுக்காகத் தொழில் வழிகாட்டல் சேவையினை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஒதுக்கீடுகளில் பௌதிக முன்னேற்றம் முறையே 116 சதவீதம், 118 சதவீதம் மற்றும் 142 சதவீதமாகவும் நிதி முன்னேற்றம் முறையே 31 சதவீதம், 71 சதவீதம் | 03 நிகழ்ச்சித் திட்டங்களுக்காக செலவிடப்பட்டிருந்தது என்பது. | முறையான திட்டமிடலுடன் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மற்றும் 94 சதவீதமாகவும் இருந்தது. இந்த வேலைத் திட்டத்திற்காக மிகை ஒதுக்கீடும் மற்றும் குறைவான இலக்கும் திட்டமிடப்பட்டிருந்ததுடன், எஞ்சிய ஒதுக்கீடு வேறு வேலைத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டு செலவிடப்பட்டிருந்தமையும் கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ளப்பட முடியாத நிலைமை காணப்பட்டது. அதே போன்று தனி நபர் ஆராய்ச்சி நடவடிக்கைகள் நடாத்துதல் மற்றும் அறிக்கையினை வெளியிடுவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 450,000 தொகையும், ரூபா 165,000 தொகையும் செலவிடப்பட்டிருந்ததுடன் மொத்த நிதி சதவீதம் 37 சதவீதம் ஆகும். | | |

**4.3 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2509 செலவின விடயத்தின் கீழ் விளம்பர வீடியோக்களை உருவாக்குவதற்காக ரூபா 500,000 நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த பணிப் பொறுப்புகள் நிறைவேற்றப்படடிருக்கவில்லை. இதற்கு முந்தைய ஆண்டில் திணைக்களத்திடம் 03 வீடியோக்களும் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் 13 வீடியோக்களும் இருந்த போதிலும் கவனக் குறைவினால் இந்த நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டு செயல் நடவடிக்கைத் திட்டதிற்மைய, 2509 செலவின விடயத்தின் கீழ் விளம்பர வீடியோ அபிவிருத்திக்காக ரூபா 500,000 நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், திணைக்களத்தின் பணிகள் தொடர்பான 03 வீடியோக்களைப் போன்றே 13 மாவட்டங்களில் மாவட்ட மட்டத்தில் தயாரிக்கப்பட்ட 13 வீடியோக்களும் கடந்த ஆண்டின் நடுப்பகுதியளவில் திணைக்கள வசம் காணப்பட்டது எனவும் அந்த வீடியோக்கள் பிரதானமாக வேலைவாய்ப்புச் சந்தை சந்தர்ப்பங்களில் காட்சிப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுவதுடன், அந்தப் பணிக்காக தற்போது காணப்படும் வீடியோக்கள் போதுமானது என்பதனால் | பணிப் பொறுப்புகள் சரியான முறையில் திட்டமிடப்பட வேண்டியதுடன் கவனத்துடன் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அநாவசியமாக நிதி வீணாவதைக் குறைக்கும் நோக்கில் அந்த ஒதுக்கீடு பயன்படுத்தப்படவில்லை என்பது. | |

**4.4 செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமல் கைவிடுதல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முறைசாரா பிரிவுகளில் பணிபுரிபவர்களுக்கு சேவையின் கண்ணியத்தினை (Dignity of Labour) தாபிக்கும் நோக்கில் 2023 ஆம் ஆண்டில் மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்ட வேலைத் திட்டத்திற்கு முறைசாரா பிரிவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சங்கங்கள் மற்றும் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 2024 ஆம் ஆண்டில் Gold Fair வேலைத் திட்டத்துடன் இணைந்து 25 வேலைத் திட்டங்கள் மூலம் மாவட்ட மட்டத்தில் தெளிவுபடுத்தல்கள் மற்றும் பதிவு செய்தல்கள் மட்டும் மேற்கொள்ளப்பட்டு அதிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பணிப் போறுப்புகளை நிறைவேற்றிக் கொள்ளுவதற்கான மேலதிக வேலைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருப்பதாக அவதானிக்கப்படவில்லை. 2024 ஆம் ஆண்டில் தெளிவுபடுத்தல் வேலைத் திட்டங்களுக்காக ரூபா 717,547 செலவிடப்பட்டிருந்ததுடன் 2024 ஆம் ஆண்டினுள் ரூபா 1.25 மில்லியன் நிதி செலவிடப்பட்டிருந்தது. | வளமான நாடு – அழகான வாழ்க்கை எனும் அரச கொள்கையினுள் முறைசாரா பிரிவுகளில் பணிபுரிபவர்களுக்கான சேவையின் கண்ணியத்தினை உரித்தாக்குதல் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதனைச் அடைந்துக்கொள்ள வேலைத் திட்டங்களைத் தொடர்ச்சியாகச் செயற்படுத்துதல் முக்கியம் என்பது. | செயற்திட்டங்கள் சரியான முறையில் செயற்படுத்தப்படுதல் வேண்டும். |

### 4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் களஞ்சியசாலை 2025 ஏப்ரல் 04 ஆம் திகதி பௌதீகப் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்ட போது 2024 திசெம்பர் 28 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 3,212,904 பெறுமதியான 10 மடிக்கணினிகள் விநியோகிக்கப்படாது காணப்பட்டதுடன், பயன்படுத்தப்பட்ட 79 மடிக்கணினிகளும் காணப்பட்டன. | எதிர்காலத்தில் இந்தப் பொருட்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சொத்துக்கள் உச்சபட்ச செயல் திறனுடன் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 30 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 522,819 பெறுமதியான 3 கெமெராக்களும் (Under water action camera) பயன்படுத்தப்படாது காணப்பட்டதுடன் அவை பயன்பாடின்றி வைக்கப்பட்டு கைத்தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கைத்தவிர்ப்பதற்கு இனம் காணப்பட்டுள்ளது என்பது. | தேவைப்பாட்டினை இனம் கண்டு சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டியதுடன் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | களஞ்சியசாலையினுள் 14 Keyboard உம், 10 மொனிட்டர்களும், 12 CPU உம், 27 Wifi உபகரணங்களும் , 09 ரௌட்டர்களும், 09 இன்டர்கொம் தொலைபேசிகளும் பயன்படுத்தப்படாது காணப்பட்டன. | கைத்தவிர்ப்பதற்கு இனம் காணப்பட்டுள்ளது என்பது. | பயன்படுத்தப்படக்கூடிய நிலையில் உள்ள சொத்துக்களை உபயோகப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2019 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட "Lak Rakiya Harasara" பொறிக்கப்பட்ட 09 நினைவுச் சின்னங்களும், 90 கோப்பைகளும் (Mug) விநியோகிக்கப்படாது காணப்பட்டன. | முறையாக அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | பொருத்தமான வகையில் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |
| (உ) | ILO அமைப்பினால் வழங்கப்பட்ட 10 தெளிவுபடுத்தல் சிடி பெட்டிகள் (Awareness CD Boxes), 10 விளையாட்டு உபகரணங்கள் ( Game Board) களஞ்சியப்படுத்தப்பட்டு காணப்பட்டன. | அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்பது. | தேவைப்பாட்டினை இனம் கண்டு விநியோகிக்கப்படுதல் வேண்டும். |
| (ஊ) | வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்படும் போது மாவட்ட அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த தளபாடங்கள், கணினி இயந்திரங்கள், டெப் போன்றவை குறித்த மாவட்ட அலுவலகம் நடாத்தப்பட்டு வருகின்ற பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு மெள்மையாய்வு நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருந்தது. குறித்த மெய்மையாய்வு அறிக்கை மற்றும் பிரதான அலுவலகத்தின் பதிவேடுகளுடன் ஒப்பீடு மேற்கொள்ளப்படுவதாக அவதானிக்கப்படவில்லை. | ஒப்பீடு செய்யப்பட்டு மெய்மையாய்வு அறிக்கை தயாரிக்கப்படும் என்பது. | சொத்துக்களின் இருப்பு முறையாக உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். |